**<u>சுருக்கம்</u>**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை – தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை – 2013–2014 ஆம் ஆண்டில் தொடர திட்டத் தொடராணை மற்றும் ரூ.6.00 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை**

**அரசாணை (1 D) எண்.07,** **நாள்: 13.03.2014**

**விஜய–மாசி 29, திருவள்ளுவர் ஆண்டு, 2045**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.124, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.1) துறை, நாள் 24.12.2012.
2. அரசாணை (நிலை) எண்.66, மாற்றுத் திறனாளிகள் நலத் (மாதிந.2) துறை, நாள் 12.07.2013.
3. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.767/ம.இ.நிர்–3/2013, நாள் 29.10.2013.

----

**<u>ஆணை:</u>**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு, பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ், தொழுநோயால் பாதிக்கப்பட்ட 6161 நபர்களுக்கு மாதம் ரூ.1,000/– என்ற வீதத்தில், 2012–2013 ஆம் நிதியாண்டில் டிசம்பர் 2012 முதல் மார்ச் 2013 வரையிலான நான்கு மாதங்களுக்கு, சில நிபந்தனைகளுக்குட்பட்டு பராமரிப்பு உதவித் தொகை வழங்க, ரூ.2,58,82,370/– நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், இன்னபிற திட்டங்களுடன் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் மைய வங்கி முறையின் கீழ் (Core Banking System) பராமரிப்பு உதவித் தொகை வழங்கவும், ஏற்கனவே உள்ள பயனாளிகளுக்கு வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதிக்கு மேல் கூடுதலாக நிதி ஒதுக்கீடு தேவைப்படின் மற்றும் கூடுதலாக கண்டறியப்பட்ட பயனாளிகளுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்க நிதி ஒப்பளிப்பு தேவைப்படின் உரிய கருத்துரு அரசுக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாவட்டங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு தொழுநோயாளிகள் கண்டறியப்பட்டு பராமரிப்பு உதவித் தொகை வழங்கப்பட்டு வருவதாகவும், பயனாளிகள் எண்ணிக்கை குறைவாக உள்ளதால், இத்திட்டத்தின் கீழ், தொழுநோயால் பாதிக்கப்பட்ட 5000 நபர்களுக்கு மட்டுமே பராமரிப்பு உதவித் தொகை தேவைப்படுகிறது எனவும், மணியார்டர் கட்டணம் இல்லாமல், தொழுநோயால் பாதிக்கப்பட்ட 5000 பயனாளிகளுக்கு மாதம் ரூ.1,000/– என்ற வீதத்தில் 12 மாதங்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை

[த.பி.பா]

மின்னணு தீர்வு சேவையின் (Eectronic Clearing Service) மூலம் வழங்கிட ஏதுவாக, ரூ.6,00,00,000/– நிதி ஒதுக்கீடு வழங்கி, 2013–2014 ஆம் நிதியாண்டிற்கு திட்டத் தொடராணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை அரசு ஏற்று, தொழுநோயால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தினை, 2013–2014 ஆம் நிதியாண்டில் தொடர திட்டத் தொடராணையும், இச்செலவினத்திற்கென தொழுநோயால் பாதிக்கப்பட்ட 5000 நபர்களுக்கு, மாதம் ஒன்றுக்கு ரூ.1,000/– வீதம் 12 மாதங்களுக்கு மின்னணு தீர்வு சேவையின் (Eelectronic Clearing Service) மூலம் பராமரிப்பு உதவித் தொகை வழங்கத் தேவைப்படும் செலவினம் ரூ.6,00,00,000/– (ரூபாய் ஆறு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. இக்கூடுதல் செலவினத்திற்கான தொகை, 2013–2014ம் ஆண்டு இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தினை மேற்கொள்ள முதன்மைச் செயலாளர் / மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இச்செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

**“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02–சமூக நலன் – 104–முதியோர், இயலாமையுற்றோர் மற்றும் ஆதரவற்றோர் நலன் – பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள் – II–மாநிலத் திட்டம் – KQ–தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பராமரிப்பு உதவித் தொகை வழங்குதல் – 09–உதவித் தொகை – 03–குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை’’. (து.தொ.கு.2235–02–104–KQ–0938)**

6. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன், அத்துறையின் அ.சா.எண்.12580/நிதி(சந)/2014, நாள் 04.03.2014–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பொ. சிவசங்கரன்,
அரசுச் செயலாளர்.

**பெறுநர்**
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
மாநிலக் கணக்காயர், சென்னை–18 / பெயரில்.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சரின் செயலாளர்–II, சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் பொதுப்பணி) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (சந (ம) சஉதி) அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (ச.ந /வ.செ.பொது–I / வ.செ.பொது. II)த் துறை, சென்னை–9.
இ.கோ / உ. ந.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.